Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



*'Listening with the ear of the heart'*

Pope Francis' Message for World Communications Day 2022

நவம்பர் 17

# தகவல் தொடர்பு தினம்

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



20 நவம்பர்

# கிறிஸ்து அரசர் திருநாள்

மலர் 19 நவம்பர் 2022 இதழ் 11

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 04.11.2022 | Friday | 10.00am | School Day | MJKM |
| 05.11.2022 | Saturday | 11.00am | Finance Council meeting | Bishop House |
| 06.11.2022-10.11.2022 | Sunday-Thursday | | CBCI | Bangalore |
| 11.11.2022 | Friday | | Marriage | Unnamalaikadai |
| 12.11.2022 | Saturday | | Marriage | Sankar Nagar |
| 13.11.2022 | Sunday | | Holy Mass | Nadaikavu |
| 14.11.2022-16.11.2022 | Monday-Wednesday | | Class (Pneumatology & Grace) | St. Mary's Major Seminary |
| 18.11.2022-19.11.2022 | Friday-Saturday | | Class (Pneumatology & Grace) | St. Mary's Major Seminary |
| 19.11.2022 | Saturday | | Holy Mass | DM Convent - Mtm |
| 21.11.2022 | Monday | | Marriage | Christuvilagam |
| 22.11.2022-23.11.2022 | Tuesday-Wednesday | | Class (Pneumatology & Grace) | St. Mary's Major Seminary |
| 22.11.2022 | Tuesday | | Holy Mass | DM Convent - Kirathoor |
| 25.11.2022 | Friday | | Class (Pneumatology & Grace)<br>School Day | St. Mary's Major Seminary<br>Mariagiri |
| 26.11.2022 | Saturday | | Feast and Jubilee Celebration of Bishop Yohanon Mar Chrysostom | Pathanamthitta |
| 28.11.2022 | Monday | | Class (Pneumatology & Grace) | St. Mary's Major Seminary |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 நவம்பர் 2022 இதழ். 11

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*

*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*

*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*

*Diocese of Marthandam*



# இளம் குருமடச் செய்திகள்

புனித எப்ரேம் இளங்குருமடத்திற்கும் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரிக்கும் இடையேயுள்ள உறவை வலுப்படுத்தும் விதமாக 20-10-2022 அன்று நட்பு ரீதியிலான கைப்பந்தாட்டம் நடத்தப்பட்டது. இதில் நம் இளங்குருமாணவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கல்வியாண்டின் முதல் பருவம் அக்டோபர் மாதத்துடன் நிறைவு பெறுகிறது. ஆகவே, இளங்குருமாணவர்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் 21-10-2022 அன்று அதிபர் தந்தை அவர்கள் தலைமையில் ஓர் இன்பச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. இளங்குருமாணவர்கள் இந்நன்னாளினை மிகுந்த ஆனந்தத்துடனும் களிப்புடனும் கொண்டாடினர்.



இலவுவிளை புனித எப்ரேம் இளங்குருமடத்தில் கடந்த ஆறு ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றிய பேரருட்தந்தை முனைவர். ஜோஸ் அவர்கள் 10-10-2022 அன்று பணிமாற்றம் பெற்றார். அவருக்கு இளங்குருமட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் சார்பாக பிரியாவிடை அளிக்கப்பட்டது. அவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.



இளங்குருமடத்தின் புதிய அதிபராக, 10-11-2022 அன்று பேரருட்தந்தை ஜோசப் சுந்தரம் அவர்கள் பொறுப்பேற்றார்கள். அருட்தந்தை அவர்களுக்கு பணி சிறக்க வாழ்த்துக்கள்.

# குருக்கள் செய்தி

**குருக்களுக்கான கூடுகை**

அக்டோபர் மாதம் 3 மற்றும் 4-ம் தேதிகளில் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து குருக்களுக்கான இரண்டு நாள் கூடுகை நடைப்பெற்றது. இதில் ஆயர் அவர்களும் மறைமாவட்ட குருக்களும் பங்கெடுத்தனர்.





**குருக்களுக்கான தியானம் மற்றும் குருக்கள் மன்ற கூடுகை**

இம்மாத குருக்களுக்கான தியானம் 11-10-2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்றது. தியானத்தை தொடர்ந்து குருக்கள் மன்ற கூட்டமும் நடைபெற்றது. இதில் ஆயர் அவர்கள் ஆசியுரையும், அறிவுரையும் வழங்கினார்கள்.

# நற்செய்தி சங்கம்

இம் மாதம் நற்செய்தி சங்க வகுப்பானது 8-10-2022 அன்று தாபோர் தியான இல்லத்தில் நடத்தப்பட்டது. இதில் நற்செய்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கை வைப்பு பெற்றவர்கள் மற்றும் கை வைப்பு பெறாதவர்கள் என்னும் அடிப்படையில் இரண்டு வகுப்பாக பிரித்து அருள் சகோதரி மேரி பிரசாத் மற்றும் அருள் சகோதரி ஜோய் மேரி ஆகியோர் வகுப்புகள் நடத்தினர் மதியத்திற்குப் பின்பு நற்செய்தி சங்க கூட்டம் நடைபெற்றது இதில் பலவிதமான கருத்துகள் கலந்து ஆலோசிக்கப்பட்டது.





# மறைபரப்பு தளங்கள்

திண்டுக்கல் மாவட்டத்தில், ஒட்டன்சத்திரம் அருகில், வாகறை என்னும் ஊரில் அருட்தந்தை. ஜாண்குமார் அவர்களின் முயற்சியிலும், கோயம்பத்தூரை சார்ந்த பொறியாளர் திரு. ஜாண்பீட்டர் அவர்களின் உதவியுடனும் 13-10-2022 அன்று புதிதாக மறைபரப்புத்தளம் ஆரம்பிக்கப் பட்டது. அதே நாளில் அருள் வாழ்வியமும், MIDS சுயஉதவிக் குழுக்களும் ஆரம்பிக்கப்பட்டன. அனைவரும் ஒன்று கூடவும், திருப்பலி நிறைவேற்றவும் வீடு ஒன்று வாடகைக்கு வாங்கப்பட்டது. தற்பொழுது ஜெபமும், திருப்பலியும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.00 மணிக்கு நடந்து வருகின்றது. இம்மறைப்பரப்பு தளத்தில் அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்கள் உதவிபுரிந்து வருகின்றார்கள்.



திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் கல்லடிசிதம்பரபுரம் என்னும் ஊரில் விமலபுரம் பங்கை சார்ந்த திருமதி. விமலா அவர்கள் குடும்பத்தை மையமாக கொண்டு 28-8-2022 அன்று இம்மறைபரப்புதளம் ஆரம்பிக்கப்பட்டது. புன்னைநகரை சார்ந்த திரு.ரெய்மண் அவர்களின் குடும்பத்தின் தனி பயன்பாட்டிற்காக கட்டப்பட்டிருந்த சிற்றாலயத்தை நமது பயன்பாட்டிற்காக வாடகைக்கு தந்துள்ளார்கள். எனவே எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை 5.00 மணிக்கு மாலை ஜெபம் மற்றும் திருப்பலி நடந்து வருகின்றது. இங்கு புதிதாக ஒரு குடும்பத்தினர் திருமுழுக்கு பெற்றனர். வேறு சில குடும்பங்கள் வருகை தந்து ஆராதனைகளில் பங்குகொள்கின்றனர்.

# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் துறவற சபையின் அருட்சகோதரி மேரி மோனிக்கா அவர்கள் 01-10-2022 அன்று காலை 5.45 மணியளவில் இறையடி சேர்ந்தார்கள். இவர்களது நல்லடக்கம் சடங்குகள் 01.10.2022 அன்று மாலை 4.30 மணிக்கு மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ்பிறைட், குருக்கள், அருட் சகோதரிகள் முன்னிலையில் மார்த்தாண்டம் மாகாண இல்லத்தில் நடைப்பெற்றது. அருட்சகோதரி மேரி மோனிக்கா அவர்கள் நல்ல ஒரு ஆசிரியராகவும் ஆன்மீக வாழ்வின் முன்மாதிரியாகவும் விளங்கினார்கள். மேரிமக்கள் துறவற சபையின் Mother General, Mother Provincial போன்ற பொறுப்புக்களிலிருந்து சிறப்பாக பணியாற்றினார்கள்.அவர்களின் ஆன்மா இறைவனின் நித்திய இளைபாறுதல் அடைய ஜெபிப்போம்.




## General Body Mission meet

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாண எல்லைக்கு உட்பட்ட மறைபரப்பு தளங்களில் பணிபுரியும் அருட்சகோதரிகள் கூட்டம் 15-10-2022 அன்று நடைபெற்றது. இந்த கூடுகையை Mission councilor Sr. Bendicta Francis அவர்கள் வழிநடத்தினார்கள். Mother அனிலா கிறிஸ்டி மற்றும் General Mission Councilor அருட்சகோதரி ஜோகான் அவர்களும் வகுப்புகள் நடத்தினார்கள். இதில் 80 பேர் கலந்து கொண்டு மறைபரப்பு பணியின் மேலுள்ள ஆர்வத்தை வலுப்படுத்தினார்கள். இக்கூடுகை மார்த்தாண்டம் மாகாண இல்லத்தில் வைத்து நடைப்பெற்றது.



# SISTERS OF CHARITY OF ST. JEANNE ANTIDE THOURET

Children for Unity சார்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சி முகாம் “பயணியின் மனதோடு” என்ற ஆய்வு பொருளோடு 05-11-2022 அன்று நடைக்காவு யூனிட்டி கோமில் வைத்து நடைப்பெற்றது. மொத்தம் 145 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இயக்குநர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்களின் வழிகாட்டுதல் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டன. அருட்தந்தை வில்பின், அருட்தந்தை ஜெனிற்றோ இந்நாள் இனிதே அமைய உதவினார்கள்.

Children for Unity முதல் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மரிய ரீத்தா அவர்களின் விண்ணக வாழ்வின் மூன்றாவது ஆண்டு நினைவாக, பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.



## திருமண ஆயத்தப்பயிற்சி

**நவம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 18, 19 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# MCYM
## Youth Apostolate

### இளையோர் இயக்க தினம்

மறைமாவட்ட அளவிலான இளையோர் இயக்க தினம் 02-10-2022 அன்று மதியம் 02:00 மணிக்கு கொல்லங்கோடு மறைவட்டம் பின்குளம் புனித மரியன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து 'இணைந்து பயணிக்கும் இளைஞராக' என்ற மையச் சிந்தனையில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட், மத்திய செயலக பொருளர் செல்வன். ஜோபின், மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட், துணை இயக்குநர் அருட்தந்தை வில்பின் விஜு, அருட்சகோதரி ஏஞ்சல் தெரேஸ் DM. அருட்சகோதரி ஊக்குனர் அருட்சகோதரி பிளவர் ஜோண் , மத்திய செயலக துணை தலைவர் செல்வி. ஹர்ஷிலின், மறைமாவட்ட தலைவர் செல்வன். ஜோஸ் மில்றன், மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து இளையோர்களும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் இளம் விவசாயிகளை கௌரவித்தல் மற்றும் மறைவட்ட இயக்குநர்கள் மற்றும் ஊக்குனர்களை கௌரவித்தல் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. தொடர்ந்து மறைமாவட்ட அளவில் நடைபெற்ற எழுத்து போட்டிகளுக்கான பரிசும் வழங்கப்பெற்றது. இளையோர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் இவ்விழா நிறைவுற்றது.

### மலங்கரை திருஅவை அளவிலான இளையோர் இயக்க தினம்:

மலங்கரை திருஅவை அளவிலான இளையோர் இயக்க தினம் 9-10-2022 அன்று பத்தனம்திட்டை மறைமாவட்டம் அனந்தப்பள்ளி ஆலயத்தில் வைத்து MCYM Chairman ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலிருந்து MCYM செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அருட்சகோதரி ஊக்குனர் அருட்சகோதரி பிளவர் ஜோண் அவர்களும் கலந்து கொண்டார்கள்.



### மலங்கரை திருஅவை அளவிலான வினாடி வினா போட்டி:

மலங்கரை திருஅவை அளவிலான வினாடி வினா போட்டியானது பத்தனம்திட்டை மறைமாவட்டம் அனந்தப்பள்ளி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 10 மறைமாவட்ட இளையோர்கள் கலந்து கொண்டனர். நம்முடைய மறைமாவட்ட இளையோர் களும் இதில் ஆர்வமுடன் கலந்து கொண்டு நான்காவது இடத்தைப் பிடித்து நம் மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.



### மறைமாவட்ட MCYM செயற்குழு கூட்டம்:

மறைமாவட்ட செயற்குழு கூட்டமானது online வழியாக இணை இயக்குநர் அருட்தந்தை வில்பின் விஜு அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. இக்கூடுகையில் அருட்சகோதரி ஊக்குனர் அருட்சகோதரி பிளவர் ஜோண், இயக்குநர் அருட்தந்தை ஜோணி ஆல்பிரட் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மறைமாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கான ஒழுங்கமைப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# MCA
## Diocese of Marthandam

### MCA கூடுகை

MCA கூட்டமானது அருட்தந்தை Robinson அவர்கள் தலைமையில் இறச்சகுளம் ஆலயத்தில் வைத்து 24.10.2022 அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. அருட்தந்தை Robinson மற்றும் அருட்சகோதரி Rose Francis அவர்களின் நாம விழாவை முன்னிட்டு சிறப்பு வாழ்த்து கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் டிசம்பர் 18 ம் தேதி MCA சார்பாக கிறிஸ்மஸ் விழா கொண்டாட வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### வழிகாட்டுதல் கூட்டம்

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் இரண்டாம் அலகில் தேர்வு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு 01.10.2022 மற்றும் 06.10.2022 ஆகிய இரு தினங்கள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழிகாட்டுதல் கூட்டம் நடத்தப்பட்டன. இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையேற்று குடும்ப வளர்ச்சி திட்டத்தின் நோக்கம் மற்றும் தொழில் செய்யும் வழிமுறைகளை குறித்து உரையாற்றினார்கள். பின்னர் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்தின் திட்டங்கள் குறித்தும் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்தும் விளக்கமளித்தார்கள். தொடர்ந்து பயனாளிகளுக்கு குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழிமுறைகள் விவரிக்கப்பட்டது. பின்னர் இறுதி ஜெபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### Account Closing Meeting

குடும்ப வளர்ச்சி திட்டத்தில் ஆறாண்டுகள் பயன்பெற்ற பயனாளிகளுக்கான கூட்டம் 27.09.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பயனாளிகள் கடந்த ஆறு ஆண்டுகளில் இத்திட்டம் வழியாக தங்கள் குடும்பம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்தது என்பது குறித்து தங்கள் அனுபவங்களை பகிர்ந்தார்கள். பின்னர் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் திட்ட அலுவலர் திரு ஷாஜன் ஜோசப் ஆகியோர் பயனாளிகளின் குடும்பங்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் மேலும் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.







### உதவி திட்டங்கள்

18.10.2022 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 10 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5000/- வீதம் மொத்தம் ரூபாய் 50,000/- வழங்கப்பட்டது.

19.10.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணி மண்டலத்துக்கு உட்பட்ட 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.



### பிற நிகழ்வுகள்

மிட்ஸ் “எழுவோம் இயக்கம்” சார்பில் 28.09.2022 அன்று நாவல்காடு பகுதியில் வைத்து புற்றுநோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 33 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

12.10.2022 அன்று உண்ணாமலைகடை மற்றும் பனச்சமூடு ஆகிய பகுதிகளில் உள்ள குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகளை ஒருங்கிணைத்து கிளஸ்டர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் 29 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

14.10.2022 அன்று மிட்ஸ் மதுரை பணி மண்டலத்தில் உள்ள தேவதானம்பட்டி கிளஸ்டரில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப், திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி, அமைப்பாளர் திரு.தேவராஜ் ஆகியோர் பார்வையிட்டு அங்கு செயல்பட்டு வரும் சுய உதவி குழுக்களில் உள்ள பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டுதல்களும், கணக்கு பயிற்சியும் அளித்தார்கள்.



# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

### மறைவட்ட குருக்களுக்கான கூடுகை

குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகை 29-09-2022 அன்று அணக்கரை பங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைவட்ட MCYM மற்றும் MCC போட்டிகள், மறைவட்ட தின கொண்டாட்டங்கள் மற்றும் மறைவட்ட மேய்ப்புபணி குழு கூட்டம் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

### மறைவட்ட குருக்களுக்கான கூடுகை

மறைவட்ட மேய்ப்புபணி குழு கூட்டமானது 02-10-2022 அன்று மாத்தார் புனித சூசையப்பர் தேவாலயத்தில் வைத்து மறைவட்ட முதன்மைகுரு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைவட்ட குருக்கள், மறைவட்டத்தில் பணியாற்றுகின்ற அருட்சகோதரிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர், இதில் மறைவட்ட வளர்ச்சிபற்றியும் மறைவட்ட தின கொண்டாட்டம், ஒருவருட ஆண்டு திட்டம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் கூடுகையானது 17-10-2022 அன்று பூதப்பாண்டி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில் நாகர்கோவில் மறைவட்ட அருட்தந்தையர்கள் பங்கெடுத்து மறை மாவட்டம் மற்றும் மறை வட்ட வளர்ச்சிக்காக பலவிதமான ஆலோசனை வழங்கினார்.

# தாய்மார் சங்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தாய்மார் சங்கம் 5 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் ஒவ்வொரு பங்குகளிலும், மறைவட்டங்களிலும் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து அவர்களிலிருந்து மறைமாவட்டத்திற்கான புதிய பொறுப்பாளர்கள் 01-10-2022 அன்று தேர்வு செய்யப்பட்டனர். அன்றைய தினம் காலையில் 9.30 மணிக்கு ஜெப ஆராதனை நடைபெற்றது. இதனை அழகியமண்டபம் மறைவட்ட இயக்குநர் அருட்சகோதரி செலின் றோஸ் வழிநடத்தினார்கள். தொடர்ந்து





டாக்டர். திருமதி பிரின்சி வினோ அவர்கள் இயற்கை மருத்துவம், ஆன்மீகம் போன்றவற்றை பற்றி வகுப்புகள் நடத்தினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருஅவையில்



தாய்மார்களின் ஈடுபாடு மற்றும் பங்களிப்பை பற்றி விளக்கி கூறினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்களின் முன்னிலையில் புதிய பொறுப்பாளர்களை தேர்வுச் செய்தார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்தையும் மறைமாவட்ட இயக்குநர் அருட்சகோதரி ஏஞ்சல் ஜோஸ் மற்றும் இணை இயக்குநர் அருட்சகோதரி ஷீபா ஜோண் ஆகியோர் ஒழுங்குபடுத்தினார்கள்.

**புதிய பொறுப்பாளர்கள்**

- தலைவர் - திருமதி. மினி
- துணைதலைவர்- திருமதி. லூசியா
- செயலர் - திருமதி. கிரிஜா
- இணைசெயலர் - திருமதி. மரியநேசம்
- பொருளர் - திருமதி. சாந்தி
- செயற்குழு உறுப்பினர் 1
- செயற்குழு உறுப்பினர் 2

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## மார்த்தாண்டம் மத்திய சபை

### மார்த்தாண்டம் மத்திய சபை நிர்வாக குழு கூட்டம்

மார்த்தாண்டம் மத்திய சபை நிர்வாக குழு கூட்டமானது 19-10-2022 அன்று குழித்துறை தாபோர் தியான அரங்கில் வைத்து நடைப்பெற்றது. இக்கூட்டம் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை G. வற்கீஸ் அவர்களின் முன்னிலையில் நடைப்பெற்றது. சிறப்பு விருந்தினராக நமது மறைமாவட்ட ஆயர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

### புதிய பெண்களுக்கான கிளை சபை உருவாக்கம்

மார்த்தாண்டம் வட்டார சபையின் கீழ் செல்லங்கோணம் புனித ஜார்ஜியார் ஆலயத்தில்16-10-2022 அன்று புதிய கிளை சபை தொடங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மத்திய சபை பொறுப்பாளர்கள் வட்டாரசபை தலைவர்கள் செல்லங்கோணம் பங்குதந்தை அருட்தந்தை ஜிபு மேத்தியூ, அருட்சகோதரிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மரியாயின் சேனை

## கொமித்சியச் செய்திகள்

### ➲ ஜெபமாலை பவனி :

மறைமாவட்ட அளவிலான சிறப்பு ஜெபமாலை பவனி 23-10-2022 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்கள் துவக்க உரையாற்றி ஜெபமாலை பவனியை துவக்கி வைத்தார்கள். கொமித்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை G. வற்கீஸ் அவர்களின் வழிகாட்டுதலை தொடர்ந்து ஜெபமாலை பவனியானது இறச்சகுளம் புனித யூதா ததேயு ஆலயத்திலிருந்து புறப்பட்டு புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தை வந்தடைந்தது. பின் நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். நற்கருணை ஆசீரை தொடர்ந்து மரியாயின் சேனை இறுதி ஜெபத்துடன் ஜெபமாலை பவனி நிறைவுற்றது. இப்பவனியை சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும் கொமித்சியம் சார்பில் நன்றிகள்.

### ➲ நினைவு திருப்பலி




இறந்த சேனையாளர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நவம்பர் மாதத்தில் திருப்பலி ஒப்புகொடுத்து, அவர்களுக்காக ஜெபிக்க மரியாயின் சேனை நமக்கு அறிவுறுத்துகின்றது. எனவே இறந்த சேனையாளர்களுக்காக நாம் சிறப்பாக ஜெபிப்போம்.



## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை இராபின்சன்
நவம்பர் 01



அருட்தந்தை சதீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை பென்னட்
நவம்பர் 01



அருட்தந்தை அஜீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை வினு குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஹெர்பின்
நவம்பர் 01



அருட்தந்தை சஜின்
நவம்பர் 01



அருட்தந்தை சுனீஷ் குமார்
நவம்பர் 01



அருட்தந்தை ஜெனிற்றோ
நவம்பர் 01



அருட்தந்தை வில்பிறைட்
நவம்பர் 07

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் சுற்றுலா (Teaching and Non-Teaching Staffs Picnic)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் பணிபுரியும் உதவிப்பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் இணைந்து 23-09-2022 அன்று காலை சுமார் 8.30 மணியளவில் பூவார் ரிசோர்ட்டிற்கு சென்றோம். இந்நிகழ்வில் தாளாளர் தந்தை S. வர்க்கீஸ் அடிகளாரும், அருட்தந்தை. சிபி அடிகளாரும், முதல்வர். ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்களும் எங்களுடன் கலந்து கொண்டார்கள். இந்த சிறிய சுற்றுலாவானது புதுமையான அனுபவத்தை தந்தது.

**உடல் மொழி; பற்றிய வகுப்புகள் (Body Language Class)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 27-09-2022 அன்று காலை 9.30 மணியளவில் உடல் மொழி பற்றிய வகுப்பு நடைபெற்றது. இந்த வகுப்பானது அருட்தந்தை. பென்னட் அவர்கள் (பங்குத்தந்தை, உண்ணாமலைக்கடை) வழிநடத்தினார்.

**ஜி.எஸ்.டி மற்றும் இணையத்தின் பிரச்சனைகள் பற்றிய கருத்தரங்கம் (GST and Cyber Crime Seminar)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 28-09-2022 அன்று காலை 9.30 மணியளவில் ஜி.எஸ்.டி மற்றும் இணையத்தின் வழியாக நடைபெறும் பிரச்சனைகள் குறித்து ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கமானது முனைவர் கிளீடின் (உதவிப்பேராசிரியர் வர்த்தகத்துறை, புனித யூதா ததேயு கல்லூரி, தூத்தூர்) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

**கையெழுத்துப் பயிற்சி மற்றும் விளக்கத்தாளில் எழுதும் பயிற்சி (Hand writing and Chart writing Practice)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 29-09-2022 அன்று காலை 9.30 மணியளவில் கையெழுத்துப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றது. இந்த வகுப்பினை உதவிப்பேராசிரியர். முனைவர் பத்ம ரேகா அவர்கள் நடத்தி னார்கள். இந்த வகுப்பில் ஆசிரியப் பயிற்சியின்போது விளக்கத்தாளில் எழுதுவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டது.





**காந்தி ஜெயந்தி விழா (Gandhi Jayanthi Celebration)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 30-09-2022 அன்று காலை 9.30 மணியளவில் காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பலவிதமான கலைப்போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவானது கல்லூரியின் தாளாளர் தந்தை S. வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



**மிலாடி நபி விழா (Miladi-Un-Nabi Celebration)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 8-10-2022 அன்று காலை 9.30 மணியளவில் மிலாடி நபி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பலவிதமான கலைப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் திரு. ஹமீது முஸ்தபா (உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, முஸ்லீம் கலை அறிவியல் கல்லூரி, அழகியமண்டபம்) அவர்கள் மிலாடி நபி விழா பற்றிய சிறப்புரையாற்றினார். இவ்விழாவானது கல்லூரியின் தாளாளர் தந்தை S. வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**புத்தாடை வழங்கும் விழா**

HOM சிறப்புக் குழந்தைகளுக்கு புதிய சீருடைகளை மார்த்தாண்டம் டிவைன் ஹோட்டல் உரிமையாளர் திரு. டென்னிஸ் அவர்களும், தொழிலதிபர்கள் திரு. ஜெகன், திரு. ரமேஷ், திரு. பிரமி ஆகியோர் இணைந்து அன்பளிப்பாக வழங்கினார்கள். 17-10-2022 அன்று நன்கொடையாளர்கள் நேரில் வருகை தந்து அன்பளிப்புக்களை குழந்தைகளுக்கு வழங்கி மகிழ்ந்தார்கள்.



# St. Mary's CBSE School, Mariagiri

## Annual Sports meet

2022-2023-ம் கல்வி ஆண்டிற்கான விளையாட்டு விழாவானது 21-10-2022 அன்று சிறப்பாக நடைபெற்றது. தொடக்க நிகழ்வாக "போதை ஒழிப்பை" மையமாக வைத்து தொடர் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் கோழிவிளை சந்திப்பிலிருந்து பள்ளி வளாகம் வரை நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு



விருந்தினராக கலந்து கொண்ட காவல்துறை உதவி ஆய்வாளர் திரு. பால்ராஜ் அவர்கள் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்து, விளையாட்டு விழாவை துவக்கி வைத்தார்கள். மரியாகிரி கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் தலைமைதாங்கி தலைவர் உரை நிகழ்த்தினார்கள். பின் மாணவர்களின் கலைநிகழ்ச்சியை தொடர்ந்து மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை வினுகுமார் மற்றும் முதல்வர் அருட்சகோதரி ஸோபி வற்கீஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM அலுவலக பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 06.10.2022 அன்று HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் HOM பணியாளர்கள் அனைவரும் கலந்துகொணடனர். திருமதி லதா அவர்கள் அறிக்கை



வாசித்தார்கள். அருட்தந்தை ராபர்ட் அவர்கள் ஒவ்வொருவரின் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். பின்னர் HOM வழியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் அனைத்து மண்டலங்களிலும் மருத்துவ முகாம்கள் மற்றும் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.



HOM நலவாழ்வு இயக்கம் சார்பாக செருப்பாலூர் பங்கைச் சார்ந்த புவனேஷ் என்ற மாணவனுக்கு பிஷியோதெரபி மருத்துவ இரண்டாம் பருவ பயிற்சி கட்டணமாக ரூ. 38700 ஐ HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் வழங்கினரர்கள்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக செப்டம்பர் மாதம் 80 நோயுற்ற முதியோர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் அருட்தந்தை ராபர்ட் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் தாய் சேய் நலத்திட்டம் சார்பாக 30 கர்ப்பிணி பெண்களுக்கு சத்து மாவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணையம் மற்றும் HOM நலவாழ்வு இயக்கம் சார்பாக உலக மனநோயாளர்



தினத்தை கொண்டாடும் விதமாக கன்னியாகுரி குமாரபுரம் அருகில் செயல்பட்டு வரும் பெதானியா மனநோயாளிகள் பராமரிப்பு இல்லம் சந்திக்கப்பட்டது.

HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட், தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணைய செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் மேரி, மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் செயலர் ஜாண், உறுப்பினர் பால்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். அருட்சகோதரி ஜோஸ்பின் மேரி அவர்கள் அங்கு தங்கி சிகிட்சை பெற்றுவரும் நோயாளிகளை சந்தித்து அவர்கள் நிலை குறித்து கேட்டறிந்தார்கள். பெதானியா மனநோயாளிகள் பராமரிப்பு இல்ல நிர்வாகிகள் அதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# ஆயரின் அக்டோபர் மாத நிகழ்வுகள்



1 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற தாய்மார்சங்க கூடுகையில் திருஅவையில் தாய்மார்களின் பங்கேற்பு மையகருத்தில் சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்கள்.

1 ➢ பெருவழிக்கடவு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ புஷ்பகிரி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ பின்குளம் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான இளையோர் இயக்க கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினார்.

3-4 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான கூடுகையில் கலந்து கொண்டார்.



5 ➢ மீனச்சல் ஆலய வெள்ளிவிழா நிறைவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

5 ➢ குழித்துறை மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்கள்.

6-7 ➢ சாலக்குடி டிவைன் தியான இல்லத்தில் சிறப்பு தியானத்தை வழிநடத்தினார்கள்

9 ➢ அனந்தப்பள்ளி ஆலயத்தில் வைத்து நடைபெற்ற திருஅவை அளவிலான இளையோர் இயக்க கொண்டாட்ட நிகழ்வில் திருப்பலி நிறைவேற்றி, நிகழ்வுகளுக்கு தலைமைத் தாங்கினார்.

9 ➢ குளப்பாறை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

10 ➢ மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவை முன்னிட்டு பட்டம் பேராலயத்தில் நடைபெற்ற நினைவு திருப்பலி மற்றும் தூப மன்றாட்டில் கலந்து கொண்டார்கள்.

10 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவைகளின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

11 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக்கொண்டு முன்னோக்கிய பயணத்திற்கான ஆலோசனை வழங்கினார்.

11 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற College Board கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

12 ➢ Philokalia என்ற அமைப்பு மூலம் செருப்பாலூர் ஆலயத்தை சாரந்த உறுப்பினருக்கு கட்டிகொடுக்கப்பட்ட இல்லத்தை அர்ச்சித்து அருளினார்.

14 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் இவ்வாண்டு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட MBA பாடப்பிரிவு அறிமுக விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

16 ➢ ஞானதாசபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்

16 ➢ மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்ற வின்செண்ட் தே பவுல் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

17-21 ➢ குழித்துறை மறைமாவட்ட குருக்களுக்கான ஆண்டு தியானத்தை வழிநடத்தினார்கள்.

21 ➢ மங்காடு பங்கை சார்ந்த திரு. சொர்ணமணி அவர்களின் நல்லடக்க இறுதி திருச்சடங்கிற்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கோள்பிங் தின கொணடாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ ஆதிச்சவிளாகம் ஆலயத்தின் புது கொடிமரத்தை அர்ச்சித்து, திருவிழா திருப்பலி நிறைவேற்றிஇறையாசீர் பொழிந்தார்

23 ➢ மங்காடு சி.எஸ்.ஐ. ஆலயத்தின் 200 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் வாழ்த்துரை வழங்கினார்.

24 ➢ இறச்சகுளம் ஆலயத்தில் மரியாயின் சேனை பொறுப்பாளர்கள் முன்னின்று நடத்திய மறைமாவட்ட அளவிலான ஜெபமாலை பவனியில் ஆசியுரை வழங்கினார்.

24 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவைகளின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ பாகோடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற 'மூத்த குடிமக்கள்' தின கொண்டாட்ட கூடுகையில் சிறப்புரையாற்றினார்.

29 ➢ மாத்தாரில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட முதியோர் இல்லத்தை அர்ச்சித்து அருளினார்.

30 ➢ பாளையங்கோட்டை மறைமாவட்டம் மகாராஜா ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்

30 ➢ சீறோபாயின்ட் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்



## இம்மாதம் நினைவு கூர

நவம்பர் 2022

1 – அனைத்து புனிதர்கள்

3 – பௌலோஸ் மார் பீலக்ஸினோஸ் ஆண்டகையின் நினைவு
நிசியா நகரத்து 318 தந்தையர்கள்

7 – ஹூ$^{6}$தோஸ் ஈத்தோ ஞாயிறு (திருஅவையின் புதிதாக்கம்)
மிலித்தீன் நகரத்து 33 இரத்தசாட்சிகள்



8 – அனைத்து தூதர்கள்

9 – புனித தெயதோர் 10

10 – இறைவாக்கினர் சாமுவேல், திருத்தந்தை லியோ

12 – அலெக்ஸாந்திரியாவின் மார் யோவான்

13 – புனித தங்கநாவு யோவான்
யுஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் பெயர்விழா

14 – சக்கரியாவுடனான முன்னறிவிப்பு
திருத்தூதர் மார் பிலிப்பு



15 – புனித ஆல்பர்ட் 10

16 – திருத்தூதர் மத்தேயு

21 – தூய இறை அன்னைக்கு முன்னறிவிப்பு
தூய இறையன்னையின் தேவாலய நுழைவு
தகவல் தொடர்பு தினம்
கிறிஸ்து அரசர் திருநாள் (லத்தீன் முறை) 21



22 – மார் பிலமோன், புனித சிசிலியா

23 – புனித க்ளெமன்ட் திருத்தந்தை, புனித பெலிஸிற்றா
புனே கட்கி தூய எப்ரேம் மறைமாவட்ட உதயம்

28 – தூய இறையன்னை எலிசபெத்துடன் சந்திப்பு

29 – சாறூகியரான மார் யாக்கோபு 30

30 – திருத்தூதர் மார் அந்திரேயா






## மறைமாவட்ட MCYM தின கொண்டாட்டங்கள்



## மறைவட்ட அளவிலான MCYM விளையாட்டு போட்டிகள்

